## (ஏ) சென்மதி நிலுவையும் வெளிநாட்டுச் சொத்துக்களும்

பின்னிணைப்பு IIல் உள்ள 27 தொடக்கம் 31 வரை உள்ள அட்டவணைகள், இலங்கையின் சென்மதி நிலுவையினதும் வெளிநாட்டுச் சொத்துக்களினதும் அண்மை வருடங்களுக்குரிய தரவுகளைக் காட்டுகின்றன. இப்புள்ளிவிபரங்கள், உண்மையான அந்நிய செலாவணி வரவுகளினதும் கொடுப்பனவுகளினதும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் தரவுகளின்படி, சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

**பிரதானமான போக்குகள்**

இலங்கையின் சென்மதி நிலுவையில் உள்ள நடைமுறைக் கணக்குக் குறையானது 1962ம் ஆண்டிலிருந்த 1438 இலட்ச ரூபாய்களிலிருந்து, 1963ம் ஆண்டில் 1464 இலட்ச ரூபாய்களுக்குச் சிறிது அதிகரித்தது. இவ்வதிகரிப்பு கட்புலனாகாக் கணக்கு சீர்குலைந்தமையினால் ஏற்பட்டதென்பதோடு வணிகப்பொருட்கணக்கின் குறையில் ஏற்பட்ட ஒரு சிறிய சீர்த்திருத்தத்தையும் மேலதிகமாக ஈடுசெய்தது. வர்த்தக மாற்று விகிதத்திற் பாதகமான நடமாட்டங்கள் காணப்பட்ட போதும் வர்த்தகப் பொருட்கணக்கின் குறையானது 1962ம் ஆண்டிலிருந்த 1429 இலட்ச ரூபாய்களிலிருந்து 1963ம் ஆண்டு 1296 இலட்ச ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது. இதற்கு முரணாக 1962ம் ஆண்டில் கட்புலனாகாக் கணக்கிலிருந்த 9 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறை, 1963ம் ஆண்டில் 168 இலட்ச ரூபாய்களுக்கு அதிகரிக்கப்பட்டது. இது பெரும்பாலும் கொழும்புத் துறைமுகத்திலிருந்து வந்த குறைந்த வருமானத்தினாலேயே ஏற்பட்டது.[1]

1963ம் ஆண்டிலுள்ள 1464 இலட்ச ரூபாய்கள் கொண்ட நடைமுறைக்கணக்குக் குறைக்கு, வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகரிப்பதன் மூலமாகவும், வெளிநாட்டுச் சொத்துக்களைக் குறைப்பதன் மூலமாகவும், நிதியீட்டப்பட்டது. 1963ம் ஆண்டில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமானது நீண்டகால மூலதனத்தினது நிகர வரவுகளின் அதிகரிப்பாகும். இவை 1962ம் ஆண்டிலிருந்த 380 இலட்ச ரூபாய்களிலிருந்து 1963ம் ஆண்டில் 790 இலட்ச ரூபாய்களுக்கு அதிகரித்தன. முன்னேற்றமடைந்துவரும் நாடுகள் யாவும், தங்களது அபிவிருத்திச் செலவுகளுக்குத் துணைசெய்யும் பொருட்டு நீண்டகாலக் கடன்பாடுகள் மூலமாக வெளிநாட்டு உதவிகளிற் தங்கியிருக்க வேண்டுமென்பது, தற்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். ஒரு நாட்டின் அடிப்படைச் சென்மதி நிலுவை நிலைமைக்கு இயைபான அடிப்படையாக[2] இப்பேர்ப்பட்ட நீண்டகால மூலதன வரவுகள் நடைமுறைக் கணக்குக் குறைக்கு எதிராகத் தேற்றப்படவேண்டுமென்பது, இவ்வுண்மைக்குச் சார்பாகப் பெரும்பாலும் கருதப்படுகிறது. இவ்வடிப்படையிலே நோக்குகையில் ''அடிப்படைப்பணக்குறை'' 1962ம் ஆண்டிலிருந்த 1060 இலட்ச ரூபாய்களிலிருந்து 1963ம் ஆண்டு 670 இலட்ச ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது. இவ்வடிப்படைப் பணக்குறையின் நிதியீட்ட மூலங்களாவன, 310 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறுகிய காலப் பொறுப்புக்களின் (இவை இருபுடை வர்த்தகக் கொடுப்பனவு ஒப்பந்தங்களின் கீழ் பெறப்பட்ட கடன்களை உடையன) ஓர் அதிகரிப்பும், 420 இலட்ச ரூபாய்கள் கொண்ட வெளிநாட்டுச் சொத்துக்களின் (குறிப்பாக மகாவங்கியின் சர்வதேச ஒதுக்குநிதியில் ஏற்பட்ட) ஓர் வீழ்ச்சியுமாகும்.

---

1. கட்புலனாகாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய மேலும் விபரங்கள் 147ம் பக்கத்திற் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

2. நீண்டகால மூலதனத்தின் நிகர வெளியேற்றம் இருக்குமாயின், அது உண்மையில், அடிப்படைச்சென்மதி நிலைமையைப் பிரதிபலிப்பதற்கு நடைமுறைக்கணக்கின் குறையுடன் கூட்டப்படல்வேண்டும்.

## அட்டவணை II ஏ-1

## இலங்கையின் சென்மதி நிலுவை (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வருடம் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக நிலுவை | கட்புலனுகாதவை (நிகர) | நடைமுறைக் கணக்கு நிலுவை | நீண்டகால மூலதனம் (நிகர) (ஆ) | குறுகியகால மூலதனம் (நிகர) (இ) | பிழைகளும் தவறுகளும் | வெளிநாட்டுச் சொத்துக்களில் மாற்றம் (சய அடையாளம் வீழ்ச்சியைக் குறிக்கும் | காலமுடிவிலுள்ள இருப்புச் சொத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1957 | 1,669 | 1,764 | – 95 | –100 | –195 | –18 | – 1 | — | –214 | 1,062 |
| 1958 | 1,624 | 1,713 | – 89 | – 64 | –153 | + 8 | +32 | –16 | –129 | 933 |
| 1959 | 1,773 | 1,958 | –185 | – 23 | –208 | + 8 | — | + 1 | –199 | 734 |
| 1960 | 1,796 | 2,006 | –210 | – 10 | –220 | +22 | –24 | +29 | –193 | 541 |
| 1961 | 1,707 | 1,794 | – 87 | – 7 | – 94 | +11 | +93 | –19 | – 9 | 532(ஈ) |
| 1962 | 1,763 | 1,906 | –143 | – 1 | –144 | +38 | +47 | +31 | –28 | 504(ஈ) |
| 1963† | 1,725 | 1,854 | –129 | – 17 | –146 | +79 | +31 | – 6 | –42 | 462 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) அந்நிய செலாவணி வரவுகளினதும் செலவுகளினதும் மீதான செலாவணிக் கட்டுப்பாட்டுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தனிப்பட்டோரினதும், அரசாங்கத்தினதும் நீண்டகால மூலதனத்தின் நிகர நடமாட்டங்களை உட்படுத்தும்.

(இ) இருபுடை வர்த்தகக் கொடுப்பனவு ஒப்பந்தங்களின் கீழ் உள்ள பொறுப்புக்களின் மாற்றங்களையும், பொதுசனச் சட்டம் 480இன் பயனுக எழுந்த நிதிகள், வெளிநாட்டவர்க்கான வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்கள், நிதியிலிருந்து எடுக்கப்பட்டவைகள் ஆகியவற்றையும் கொண்டிருக்கின்றது.

(ஈ) 1961ம் ஆண்டு சித்திரை, 1962ம் ஆண்டு மாசி ஆகிய மாதங்களில் ஒவ்வொரு முறையும் எடுக்கப்பட்டவையான ரூபா 538 இலட்சங்களை உள்ளடக்கும்.

†தற்காலிகமானவை.

### வணிகப்பொருட்கணக்கு

1963ம் ஆண்டின் 1460 இலட்ச ரூபாய்கள் கொண்ட, பத்தில் ஒன்பதுக்கு மேற்பட்ட நடைமுறைக்கணக்குக் குறையானது, வணிகப் பொருட் கணக்கிலேற்பட்ட குறையின் விளைவினுல் உண்டானது. எனினும் 1290 இலட்ச ரூபாய்கள் கொண்ட வணிகப்பொருட் கணக்குக்குறை, 1962ம் ஆண்டிலிருந்த குறையிலும் பார்க்க 140 இலட்ச ரூபாய்கள் குறைவாகவே இருந்தது. இவ்வர்த்தகக் குறையின் வீழ்ச்சியானது, சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் ஏறக்குறைய 520 இலட்ச ரூபாய்களால் இறக்குமதிக் கொடுப்பனவுகளின் பெறுமானம் குறைக்கப்பட்டது முதலாக உண்டானது. இது, 1962ம் ஆண்டின் மூன்ரும் காலிலிருந்து கொண்டு வரப்பட்ட அதிகரித்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது. எனினும், ஏற்றுமதி வருமானங்களும் 17250 இலட்ச ரூபாய்களுக்கு 380 இலட்ச ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. எனவே, ஏற்றுமதி வருமானங்கள் இறக்குமதிப் பெறுமானத்தில் 93 சதவீதமானவற்றிற்கே நிதியீட்டின.

1963ம் ஆண்டின் வணிகப்பொருள் இறக்குமதிப் பெறுமானத்தின் வீழ்ச்சியானது பிரதானமாக 1962ம் ஆண்டின் இறுதிப் பகுதியிலிருந்து இறக்குமதிகளின்மீது கொண்டு வரப்பட்ட அதிகரித்த அளவுக்கட்டுப்பாடுகளின் விளைவாகவே ஏற்பட்டது. தனிப்பட்டோரின் இறக்குமதிகள் (அரசாங்க கூட்டுத்தாபன இறக்குமதிகளும் உட்பட) 1450 இலட்ச ரூபாய்

களால் 11340 இலட்ச ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றன. இதற்கு முரண்பாடாக உணவுக்கான அரசாங்கத்தின் இறக்குமதிக் கொடுப்பனவுகள், பெரும்பாலும், அரிசி, கோதுமைமா, குறிப்பாகச் சீனி ஆகியனவற்றின் வெளிநாட்டு விலை அதிகரித்தமையினுல், 1962ம் ஆண்டிலிருந்தவற்றைவிட இவ்வாண்டில் 660 இலட்ச ரூபாய்கள் உயர்ந்தனவாக இருந்தன. ஏனைய அரசாங்க இறக்குமதிகளும், உதாரணமாக இயந்திரங்களும், பொருள்களும், 1963ம் ஆண்டில் 270 இலட்ச ரூபாய்களால் உயர்வுற்றன.

இறக்குமதிகளின் வெளிநாட்டு விலைகளிற் பாதகமான நடமாட்டங்கள் இல்லாது போயிருப்பின் மொத்த இறக்குமதிச் செலவீட்டின் சுருக்கத் தன்மை கணிசமான அளவு பெரிதாயிருந்திருக்கக்கூடும். பொதுவான இறக்குமதி விலைக் குறிகாட்டி 1963ம் ஆண்டில் 10 சதவீதத்தால் உயர்வுற்றது. அநேகமாக எல்லாப் பிரதான பகுப்பு இறக்குமதிகளிலும் விலைகளின் உயர்ச்சி பிரதிபலிக்கப்பட்டது—உணவு (9 சதவீதம்), சகல நுகர்ச்சிப் பொருட்கள் (13 சதவீதம்), மூலதனப் பொருட்கள் (6 சதவீதம்). இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவீட்டில் ஏறக்குறைய 40 சதவீதத்திற்கு வகைகூறும் அத்தியாவசிய உணவுப்பொருள்களது இறக்குமதிகளின் விலைக்குறிகாட்டி 1957ம் ஆண்டிற்குப் பின்னர் இருந்தவற்றையெல்லாம்விட உண்மையிலேயே மிகக் கூடினதாகும். அத்தியாவசிய நுகர்ச்சிப் பொருட்களின் வெளிநாட்டு விலைகளில் இப்பேர்ப்பட்ட அதிகரிப்புகளோடு, அப்பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு, ஒரு கணிசமான அளவு பெறுமானமுள்ள அந்நிய செலாவணி வளங்களை அபிவிருத்திக்குத் தேவைப்படும் முதலீட்டப் பொருட்களுக்கு நிதியீட்டவிட்டுவிடும்.

தேயிலையினதும் இரப்பரினதும் விலைகள் முறையே, 1 சதவீதத்தாலும் 6 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றமையினுலும், இவற்றுடன் இணைந்து இரப்பரினதும் பிரதான தெங்குப் பொருட்களினதும் ஏற்றுமதி அளவுகள் முறையே, 7 சதவீதத்தாலும் 22 சதவீதத்தாலும் சுருங்கியமையினுலும் 1963ம் ஆண்டில் ஏற்றுமதி வருமானங்கள் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டன. 1963ம் ஆண்டு முடிவின்போது கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தமும், 1963ம் ஆண்டின் ஏற்றுமதி வருமான மட்டத்தின் மேற் பாதகமான தாக்கத்தை விளைவித்தது. எனினும் இப்பாதகமான காரணிகளின் விளைவானது, தேயிலை ஏற்றுமதி அளவில் 1963ம் ஆண்டின்போது ஏற்பட்ட ஒரு சிறு அதிகரிப்பினுல் (1 சதவீதம்) ஓரளவு ஈடுசெய்யப்பட்டது.

இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளின் வெளிநாட்டு விலைகளில் ஏற்பட்ட பாதகமான போக்குகளின் காரணத்தால், 1956 தொடக்கம் 1963 வரையுள்ள காலப்பகுதியில் இலங்கையினது ஏற்றுமதி வருமானங்கள் கணிசமான அளவு பாதிக்கப்பட்டன. ஆகவே 1956ம் ஆண்டிற்கும் 1963ம் ஆண்டிற்கும் இடையில் ஏற்றுமதி விலைகள் 13 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. தேயிலையின் விலைகள் 18 சதவீதத்தாலும், இரப்பரின் விலைகள் 23 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன. எனினும் 1956ம் ஆண்டிற்கும் 1963ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்றுமதி அளவு 15 சதவீதத்தால் அதிகரித்தது.

ஏற்றுமதிகளுக்காக இறக்குமதிகள் பண்டமாற்ருகப் பெறக்கூடிய நியதிகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் பாதகமான போக்கிற் செல்லும் தன்மையைக் காட்டுகின்றது. இதன் விளைவாக, இலங்கையின் ஏற்றுமதி அளவின் அதிகரிப்புக்கள், வர்த்தக மாற்று விகிதம் பாதகமற்றதாயிருக்கும் சந்தர்ப்பத்தில் எவ்வளவு முக்கியத்

துவம் வாய்ந்த உதவியை அளித்திருக்குமோ, அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த உதவியை அளிக்கவில்லை. இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத்தின் பாதகமான போக்கின் காரணமாக, 1956ம் ஆண்டிலிருந்து இலங்கையினது ஏற்றுமதிகளின் இறக்குமதி செய்யும் சக்தி, ஏற்றுமதிகளின் அளவுகளில் அதிகரிப்புக்கள் இருந்த போதிலும் ஏறக்குறைய நிலையானதாகவே இருந்தது.

### கட்புலனுகாக் கணக்கு

கீழேயுள்ள அட்டவணை II ஏ-2, இலங்கையினது சென்மதி நிலுவையின் கட்புலனுகாக் கணக்கிலுள்ள பிரதானமான மாற்றங்களைக் காட்டுகின்றது.

**அட்டவணை II ஏ-2**

**நடைமுறைக் கட்புலனுகாக் கணக்கு 1962-உம், 1963-உம்**

| | 1962 | | நிகர | 1963 (அ) | | நிகர |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | | வரவு | பற்று | |
| **சேவைகள் .. ..** | **222·5** | **230·5** | **— 8·0** | **206·0** | **228·1** | **—22·1** |
| நாணயத்திற்கு அல்லாத தங்கம் (நிகர) .. .. | — | 1·9 | — 1·9 | — | 1·9 | — 1·9 |
| வெளிநாட்டுப் பிரயாணம் .. | 5·6 | 19·9 | —14·3 | 5·6 | 22·0 | —16·4 |
| துறைமுகச் செலவுகளும், கட்டணமில்லா ஏற்றியிறக்கலும், காப்புறுதியும் .. .. | 120·4 | 49·5 | +70·9 | 110·3 | 45·7 | +64·6 |
| முதலீட்டு வருமானம் .. | 19·7 | 66·2 | —46·5 | 16·4 | 68·8 | —52·4 |
| அரசாங்கச் செலவுகள் .. | 30·8 | 32·6 | — 1·8 | 24·8 | 25·1 | — 0·3 |
| ஏனையவை .. .. | 46·0 | 60·4 | —14·4 | 48·9 | 64·6 | —15·7 |
| **நன்கொடைகள் .. ..** | **43·7** | **36·6** | **+ 7·1** | **41·5** | **36·2** | **+ 5·3** |
| தனிப்பட்டோர் அனுப்பியவையும் குடிபெயர்வோர் மாற்றங்களும் | 6·9 | 36·6 | —29·7 | 6·1 | 36·2 | —30·1 |
| அரசகரும நன்கொடைகள் .. | 36·8 | — | +36·8 | 35·4 | — | +35·4 |
| மொத்தம் .. .. | 266·2 | 267·1 | — 0·9 | 247·5 | 264·3 | —16·8 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) தற்காலிகமானவை.

1963ம் ஆண்டில் நடைமுறைக் கட்புலனுகாக் கணக்கு, 1962ம் ஆண்டிலிருந்த 9 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறையுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில் 168 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறையைக் காட்டிற்று. கட்புலனுகாக் கணக்கு நிலுவையின் மாற்றம், பிரதானமாக, ''துறைமுகச் செலவுகளும், கட்டணமில்லா ஏற்றியிறக்கலும், காப்புறுதியும்'' என்ற விடயத்தின் வழமையான மிகையில் ஏற்பட்ட 63 இலட்ச ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியினதும், முதலீட்டு வருமானம் வெளிநாட்டுப் பிரயாணம் ஆகியவற்றின் இணைந்த குறைகளின் 80 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பினதும் விளைவுகளினுல் உண்டானதாகும்.

''துறைமுகச்செலவுகளும், கட்டணமில்லா ஏற்றியிறக்கலும், காப்புறுதியும்'' என்ற விடயத்தின் மிகையிலுண்டான குறைவு, வெளிநாட்டுக் கப்பல்களுக்காக ஏற்படுத்திய கப்பற்கரிக்கல வசதிகளிலிருந்தும் ஏனைய வசதிகளிலிருந்தும் பெறப்படும் வருமானங்கள் 100 இலட்ச ரூபாய்களால் வீழ்ச்சியுற்றமையின் விளைவினுல் உண்டானதாகும். 1963ம் ஆண்டில் இலங்கையின் துறைமுகங்களிற் தங்கிய கப்பல்களின் எண்ணிக்கையில் ஏறக்குறைய 15 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. முதலீட்டு வருமானக்குறையின் அதிகரிப்பு, வீழ்ச்சியுறும் வெளிநாட்டுச் சொத்துக்களின் குறைந்த வருமானங்களினதும், அந்நிய கடன்களின் மீதான வட்டிக்கொடுப்பனவுகளின் அதிகரிப்பினதும் விளைவுகளினுல் உண்டானதாகும். ரூபா 510 இலட்சங்களைக்கொண்ட பங்கு இலாபக் கொடுப்பனவு

கள், ஏறக்குறைய 1962ம் ஆண்டிலிருந்த அதே மட்டத்திலேயே இருந்தன. அந்நிய கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள், 1956ம் ஆண்டிலிருந்த 80 இலட்ச ரூபாய்களிலிருந்து 1963ம் ஆண்டில் 160 இலட்ச ரூபாய்களுக்கு அதிகரித்திருக்கின்றன. இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களின் செலவுகளில் ரூபா 30 இலட்சங்கள் கொண்ட குறைவு ஏற்பட்டிருந்தபோதிலும், ''அரசாங்கச் செலவுகளின்'' நிலுவை 1963ம் ஆண்டிற் சிறிது சீர்திருந்தியது. இது, இலங்கை அரசாங்கத்தின் வணிகப் பொருட்களல்லாக் கணக்கின் மீதான வெளிநாட்டுச் செலவுகள், (பிரதானமாக இலங்கைத் தூதுவராலயங்களின் வெளிநாட்டுச் செலவுகள் குறைக்கப்பட்டமையினால்) ரூபா 80 இலட்சங்களால் வீழ்ச்சியுற்றமையின் விளைவாகவும், இலங்கை அரசாங்கத்தினால் மீட்டெடுக்கப்பட்ட அதன் கடற்படைத் தளங்களுக்கும், விமானப்படைத்தளங்களுக்குமாக, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இலங்கை அளித்த நஷ்ட ஈடுக்கொடுப்பனவுகள் 1962ம் ஆண்டில் முற்றுப்பெற்றமையின் விளைவாகவும், ஏற்பட்டது.

**நிதியீட்டக்கணக்கு**

இலங்கையினது சென்மதி நிலுவையின் நிதியீட்டக்கணக்கு, அட்டவணை II ஏ-3ற் காட்டப்பட்டிருக்கின்றது. நிதியீட்டக்குறை, 1963ம் ஆண்டில் ரூபா 1947 இலட்சங்களுக்கு ரூபா 61 இலட்சங்களால் அதிகரித்தது. வணிகப் பொருட்கணக்கில் உள்ளகுறை 1963ம் ஆண்டில் ஏறக்குறைய 130 இலட்ச ரூபாய்களாற் குறைக்கப்பட்டதிலிருந்து, நிதியீட்டக்குறையின் அதிகரிப்பானது, முக்கியமாக, சேவைகளின் குறை 140 இலட்ச ரூபாய்களால் அதிகரித்தமையினாலும், விசேட கணக்கு வசதிகள்[1] படைத்த கூட்டுநிலையங்களின் நிலுவையில் வெளிநின்ற பொறுப்புக்களின் குறைப்பின் மூலம் குறுகிய கால மூலதன வெளியேற்றம் அதிகரித்தமையினாலும், ஏற்பட்டது. எனினும், 1963ம் ஆண்டில் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களில் நிகழ்ந்தவோர் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமானது, தனிப்பட்டோருக்கான நீண்டகால மூலதனத்தின் நிகர உள்வரவாகும். இம்முறையிற்தான் இலங்கைக்குள் வெளிநாட்டுத் தனிப்பட்டோரது மூலதனத்தின் நிகர உள்வரவு ஏற்பட்டு[2] பல வருடங்களுக்குப் பின்னர் முதன்மையாகப் பதிவாகியதாகும். 1963ம் ஆண்டில் இலங்கைக்குள் வந்த மொத்த உள்வரவாகிய தனிப்பட்டோரது வெளிநாட்டு நீண்டகால மூலதனம், 85 இலட்ச ரூபாய்களாக இருந்தது. இது, முக்கியமாக இலங்கையில் வளர்ச்சியுறும் புதிய கைத்தொழில்களுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தது. தனிப்பட்டோரது நீண்டகால மூலதனத்தின் மொத்த வெளியேற்றம் 43 இலட்ச ரூபாய்களாக இருந்தது. இது, இலங்கையில் முதலீட்டம் செய்யப்பட்ட வெளிநாட்டு மூலதனம் தாய்நாட்டுக்கு மீட்டனுப்பப்படுதலின்மேல் மட்டுப்படுத்தல்கள் புகுத்தப்பட்ட 1957ம் ஆண்டிற்கு முந்திய ஆண்டுகளில் இருந்த சராசரியாகிய 400 இலட்ச ரூபாய்களுடன் ஒப்பிடற்குரியது. இம் மட்டுப்படுத்தல்கள் படிப்படியாக இறுக்கமாக்கப்பட்டதன் விளைவாக இலங்கையிலிருந்து மாற்றலாகும் மொத்த மூலதன மாற்றங்கள் 1957ம் ஆண்டிற்குப்

1. இவ்வசதிகளின் கீழுள்ள கொடுக்கல் வாங்கல்கள், ஸ்டேர்லிங் கூட்டு நிலையங்களினதும் ஏனைய பெரிய வர்த்தக நிலையங்களினதும் (இவற்றின் தலைமை அலுவலகங்களும், பிரதான அலுவலகங்களும் செலாவணிக் கட்டுப்பாட்டின்கீழ் நேரடியாகக் கொண்டு வரப்பட்டு அதன் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றன) தொழிற்பாடுகளைப் பிரதிபலிக்கின்றன. வெளிநிற்கும் நிலுவைகள் (இலங்கையிலிருந்து பெறவேண்டியவையும், இலங்கைக்குச் சேரவேண்டியவையும்) வங்கித் தொழில் முறையினூற் காலத்திற்குக் காலம் செய்யப்படும் மொத்தப் பண அனுப்புதல்கள் மூலமாகத் தீர்த்துவைக்கப்படுகின்றன.

2. 1960ம் ஆண்டுக்கான சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களிற் பதிவாகிய தனிப்பட்டோரது நீண்டகால மூலதனத்தின் நிகர உள்வரவு, மலேயாவிலுள்ள தோட்டங்களில் முதலீட்டம் செய்யப்பட்ட இலங்கையினரது மூலதனம் தாய் நாட்டுக்கு மீட்டனுப்பப்பட்டதைப் பிரதிபலித்தது.

பின்னரும் தொடர்ந்து வீழ்ச்சியுற்றன. 1961ம் ஆண்டிலும், 1962ம் ஆண்டிலும் அவை முறையே, 120 இலட்ச ரூபாய்களாகவும், 100 இலட்ச ரூபாய்களாகவும் இருந்தன.

## அட்டவணை II ஏ-3

### நிதியீட்ட வடிவத்தில் 1961, 1962, 1963க்கான இலங்கையின் சென்மதி நிலுவைகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961 | 1962 | 1963 (அ) |
|---|---|---|---|
| பொருட்கள் .. .. .. .. | — 86·4 | —142·9 | —129·6 |
| சேவைகள் .. .. .. .. | — 18·3 | — 8·0 | — 22·1 |
| தனிப்பட்டோர் அனுப்பியவைகளும் குடிபெயர்வோர் மாற்றங்களும் (நிகர) .. .. | — 29·7 | — 29·7 | — 30·1 |
| தனிப்பட்டோர் மூலதனக் கணக்கு (நிகர) .. | | | |
| (அ) நேரடி முதலீடு .. .. .. | — 7·8 | — 1·2 | + 4·2 |
| (ஆ) விசேட கணக்கு நிலுவைகளில் ஏற்பட்ட நிகர மாற்றங்கள் .. .. .. | + 13·9 | — 0·6 | — 11·5 |
| திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்கள் .. .. | — 4·9 | — 6·2 | — 5·6 |
| கொடுக்கப்பட்ட தங்கம் .. .. .. | | | |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குக் கட்டியது .. | — 0·9 | — | — |
| சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கிக்குக் கட்டியது .. .. .. .. | — 1·4 | — | — |
| மொத்த நிதியீட்டக்குறை .. .. .. | —135·5 | —188·6 | —194·7 |
| நிதியீட்டக்கணக்கு .. .. .. | | | |
| (அ) அரசகரும மூலதனமும் வங்கி மூலதனமும்* .. | | | |
| 1. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம் .. .. .. | + 9·6 | + 27·8 | + 41·6 |
| (அ) அந்நிய உடமைகள் .. .. | — 0·6 | + 34·7 | + 33·6 |
| (ஆ) கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் "இலங்கைக்கு வரவேண்டியவை" | + 10·2 | — 6·9 | + 8·0 |
| 2. மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் .. .. .. | +104·9 | + 92·9 | +123·2 |
| (அ) கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் "இலங்கை கொடுக்கவேண்டியவை" .. | + 21·3 | — 11·6 | + 39·4 |
| (ஆ) நீண்டகால பொறுப்புக்கள் (i) .. | + 23·8 | + 45·9 | + 81·0 |
| (இ) சர்வதேச நாணயநிதியில் பெற்றது .. | + 53·8 | + 53·8 | — |
| (ஈ) ஏனையவை (ii) .. .. .. | + 6·0 | + 4·8 | + 2·8 |
| (ஆ) அரசகரும நன்கொடைகள் (iii) .. | + 40·6 | + 36·8 | + 35·4 |
| (இ) பிழைகளும் தவறுகளும் .. .. | — 19·6 | + 31·1 | — 5·5 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(அ) தற்காலிகமானவை.

*நிதியீட்டக்கணக்கில் உள்ள சக அடையாளம் சொத்துக்களின் வீழ்ச்சியையும் அல்லது பொறுப்புக்களின் உயர்ச்சியையும், சய அடையாளம் சொத்துக்களின் உயர்ச்சியையும் அல்லது பொறுப்புக்களின் வீழ்ச்சியையும் குறிக்கின்றன.

(i) சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றவற்றையும், பிரிட்டன், ஜெர்மன் குடியரசு, ரஷ்யா, சீனு, யூகோசிலேவியா ஆகியவற்றிலிருந்து பெற்றவற்றையும் முற்றுகக் கொண்டுள்ளது.

(ii) மகாவங்கி, வர்த்தக வங்கிகள் முதலியவற்றின் இலங்கையில் வதிவற்ற கணக்கு நிலுவைகள், அமெரிக்க பொதுசன்சட்டம் 480ன் கீழ் பெற்ற உதவியின் பயனுக எழுந்த உள்நாட்டு நிதிகளின் நிலுவை, அயல்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களின் நிலுவைகள் முதலியனவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கும்.

(iii) இலங்கை அரசாங்கம் பெற்ற கொடைகளைத்தான் அரசகரும நன்கொடைகள் என்பது குறிக்கும். பண்டங்கள் வடிவத்திலேயே இவ்வகைக் கொடைகள் பிரதானமாகப் பெறப்படுகின்றன. இக்கொடைகளிற் பிரதானமானவை "கெயர்" அமெரிக்க உதவியின் கீழ் பெற்ற பாலும், கோதுமைமாவும், கனடா அவுஸ்திரேலியா முதலிய நாடுகளில் இருந்து கிடைக்கும் கொழும்புத் திட்ட உதவியுமாகும்.

அண்மை வருடங்களில், நிதியீட்டக்குறைகளுக்கு அந்நிய ஒதுக்குநிதிகளை உபயோகிப்பதன் மூலமன்றி அதிகமாக வெளிநாட்டுப் பொறுப்புக்களைத் திரட்டுதல் மூலமாகவே நிதியீட்டப்பட்டன. இம்மாதிரியான நிதியீட்டம் அபிவிருத்திக்கான மூலதனத்தின் அதிகரித்த உள்வரவையும், இருபக்கச் சென்மதி ஒப்பந்தங்களின் மூலமாக நிதியீட்டப்பட்ட இறக்குமதிகளின் அதிகரிப்பையும், அத்துடன் அடிப்படையாக, இலங்கையினது அந்நிய செலாவணி ஒதுக்கு நிதிகளின் குறைவுற்று வரும் மட்டத்தையும், பிரதிபலிக்கின்றது. 1963ம் ஆண்டில், நிதியீட்டக்குறையில் ஐந்தில் ஒன்றிற்கு வெளிநாட்டுச் சொத்துக்களைக் குறைப்பதன் மூலம் நிதியீட்டப்பட்டிருக்கையில், நிதியீட்டக்குறையில் 64 சதவீதமானவற்றிற்கு வெளிநாட்டுப் பொறுப்புக்களை, முக்கியமாக நீண்டகாலப் பொறுப்புக்களை, அதிகரிப்பதன் மூலம் நிதியீட்டப்பட்டது. ரூபா 422 இலட்சங்களால் அதிகரித்த குறுகிய காலப் பொறுப்புக்கள், பிரதானமாக, கொடுப்பனவுக்கணக்கின் கீழ் இலங்கை கொடுக்க வேண்டிய தொகைகளின் அதிகரிப்புக்களைக் கொண்டிருக்கின்றன. 1963ம் ஆண்டில், ரூபா 354 இலட்சங்கள் கொண்ட அரசகரும நன்கொடைகள் எஞ்சிய நிதியீட்டக்குறைக்கு நிதியீட்ட உதவின. அரசகரும நன்கொடைகளாகப் பெறப்பட்ட முக்கிய பண்டங்களாவன, ''கெயர்'' அமெரிக்க உதவியின் கீழ் பெற்ற பாலும், கோதுமை மாவும் (230 இலட்ச ரூபாய்கள்), கனடா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகளில் இருந்து கிடைக்கும் கொழும்புத்திட்ட உதவியுமாகும்.

மொத்த அந்நிய நீண்டகாலக்கடன்பாடு, 1963ம் ஆண்டில் 810 இலட்ச ரூபாய்களாக விளங்கியது. இதில் 224 இலட்ச ரூபாய்கள் கொண்ட தொகை உலக வங்கியிலிருந்து பெறப்பட்டதாகும். பெறப்பட்ட கடன்களில் ஏனையவை ருசியாவிலிருந்தும் (170 இலட்ச ரூபாய்கள்), சீனுவிலிருந்தும் (134 இலட்ச ரூபாய்கள்), பிரிட்டனிலிருந்தும் (83 இலட்ச ரூபாய்கள்), மேற்கு ஜெர்மனியிலிருந்தும் (106 இலட்ச ரூபாய்கள்) யூகோசிலேவியாவிலிருந்தும் (43 இலட்ச ரூபாய்கள்), கனடாவிலிருந்தும் (23 இலட்ச ரூபாய்கள்), ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்தும் (பொதுசனச் சட்டம் 480ன் கீழ் பெறப்பட்ட கடனுகிய 25 இலட்ச ரூபாய்கள்), அபிவிருத்திக்கடன் நிதியிலிருந்தும் (1 இலட்ச ரூபாய்கள்), பெறப்பட்டனவாகும்.

1963ம் ஆண்டு முடிவில் வெளிநின்ற இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள், கீழுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

### அட்டவணை II ஏ-4

### இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள்-வெளிநின்றவை[1] (மொத்தம்)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962 | 1963 | மாற்றம் |
|---|---|---|---|
| 1. கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் ''இலங்கை கொடுக்கவேண்டியவை'' .. .. .. | 10·6 | 50·0 | + 39·4 |
| 2. ச.நா. நிதியிலிருந்து பெறப்பட்டவை .. .. | 107·6 | 107·6 | — |
| 3. ஸ்டேர்லிங் கடன்கள் .. .. .. .. .. | 167·9 | 167·9 | — |
| 4. ஏனைய பெறப்பட்டனவும் வெளிநின்றனவுமான அந்நிய கடன்கள் .. .. .. .. .. | 187·8 | 263·2 | + 75·4 |
| மொத்தம் | 473·9 | 588·7 | + 114·8 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1. வெளிநாட்டு செலாவணியில் கொடுபடவேண்டிய பொறுப்புக்கள், பொதுசனச்சட்டம் 480ன் பயனுக எழுந்த நிதிகளின் நிலுவைகள், வர்த்தக வங்கிகளிலிருக்கும் வதிவற்ற கணக்குகள் நிலுவைகள் ஆகியனவற்றை உள்ளடக்குவனவல்ல. இத்தகைய நிலுவைகள் 1963ம் ஆண்டில் ரூபா 31 இலட்சத்தால் ரூபா 837 இலட்சத்திலிருந்து ரூபா 868 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளன.

**கொடுப்பனவுகளின் பிரதேச அமைப்பு**

முன்னர் கூறப்பட்டுள்ளவாறு, 1963ம் ஆண்டில் இலங்கையின் மொத்த நடைமுறைக்கணக்குக்குறை, 20 இலட்ச ரூபாய்களால் அதிகரித்து 1460 இலட்ச ரூபாய்களாக விளங்கியது. கொடுப்பனவுகளின் பிரதேச ரீதியான அடிப்படையில் நோக்கின், குறைகளினதும் மிகைகளினதும் அமைப்பில் முக்கியமான மாற்றங்கள் காணப்பட்டன. டொலர்ப் பிரதேசத்துடன் உள்ள வழமையான நடைமுறைக்கணக்கு மிகை, 1962ம் ஆண்டிலிருந்ததுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் ஏறக்குறைய 210 இலட்ச ரூபாய்களால் 1700 இலட்ச ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது. 1957ம் ஆண்டிலிருந்து 1962ம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியின் போது 800 இலட்ச ரூபாய்களாகிய வருடாந்தச் சராசரிக்குறையைக் காட்டிய பிரிட்டனுடன் உள்ள இலங்கையின் நடைமுறைக்கணக்கு நிலுவை, 1963ம் ஆண்டில் 393 இலட்ச ரூபாய்கள் கொண்ட மிகையாக மாறியது. ஏனைய ஸ்டேர்லிங் பிரதேசத்துடன் (இந்தியாவையும், பாகிஸ்தானையும் தவிர) உள்ள இலங்கையின் நடைமுறைக்கணக்கின் மீதான நிலுவையும், 378 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறையிலிருந்து 1963ம் ஆண்டில் 53 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறையாகச் சீர்திருத்தமுற்றது. இவற்றிற்கு முரணுக, இந்நியாவுடனும், பாகிஸ்தானுடனும் உள்ள வழமையான குறை 90 இலட்ச ரூபாய்களாலும், ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுத்தாபனத்து நாடுகளுடனுள்ள குறை 30 இலட்ச ரூபாய்களாலும், இலங்கையினது வர்த்தகப் பங்காளர்களாகிய ஏனைய நாடுகளுடனுள்ள குறை 1140 இலட்ச ரூபாய்களாலும் சீர்குலைவடைந்தன. இறுதியாகக் கூறப்பட்ட தொகுதி நாடுகளுடனுள்ள 1423 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறையானது, திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களையுடைய (சீனுவும் உட்பட) ஜப்பானுடன் உள்ள இலங்கையின் வர்த்தகத்தைப் பொறுத்தமட்டில் முறையே, 735 இலட்ச ரூபாய்களையும், 730 இலட்ச ரூபாய்களையும் கொண்ட பாதகமான நிலுவைகளைப் பிரதிபலித்தது. 1962ம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பொருளாதார நாடுகளுடனுள்ள இலங்கையின் நிலுவையினது 170 இலட்ச ரூபாய்கள் கொண்ட மிகையானது, 1963ம் ஆண்டில் 735 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறையாக மாறியிருக்கையில், ஜப்பானுடன் உள்ள குறையானது ஏறக்குறைய அரைவாசியாகியது. திட்டமிடப்பட்ட பொருளாதார நாடுகளுடன் உள்ள இலங்கையின் நிலுவைகளினது அதிகரித்த குறையானது, இறக்குமதிகளின் பெறுமானத்தில் 30 சதவீத அதிகரிப்புடன், ஏற்றுமதிகளின் பெறுமானத்தில் 12 சதவீத வீழ்ச்சியும் இணைந்ததன் விளைவாக ஏற்பட்டது. இதற்கு முரணுக ஜப்பானின் விடயத்தில், ஏற்றுமதிகள் 26 இலட்ச ரூபாய்கள் கொண்ட ஓர் சிறிய சீர்திருத்தத்தைக் காட்டின. ஆனுல் இறக்குமதிகள் 617 இலட்ச ரூபாய்களால் (36 சதவீதம்) வீழ்ச்சியுற்று, இறக்குமதி மட்டுப்படுத்தல்களின் அதிகரிப்பினுல் ஏற்பட்ட விளைவுகளைப் பிரதிபலித்தன.

**அட்டவணை II ஏ-5**

**நாணயப்பிரதேசங்களின்படி 1962, 1963க்கான நடைமுறைக்கணக்கு நிலைமை**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962 | | | 1963 (தற்காலிகமானவை) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | நிகர | வரவு | பற்று | நிகர |
| 1. டொலர் பிரதேசம் .. | 303·1 | 111·7 | +191·4 | 279·1 | 109·1 | +170·0 |
| 2. ஸ்டேர்லிங் பிரதேசம் .. | 1,039·0 | 1,301·5 | —262·5 | 1,030·6 | 1,157·7 | —127·1 |
| (i) பிரித்தானியா .. | 629·9 | 702·0 | — 72·1 | 631·1 | 591·8 | + 39·3 |
| (ii) இந்தியாவும், பாகிஸ்தானும் .. | 104·2 | 256·8 | —152·6 | 82·5 | 243·6 | —161·1 |
| (iii) ஏனையவை .. | 304·9 | 342·7 | — 37·8 | 317·0 | 322·3 | — 5·3 |
| 3. ஸ்டேர்லிங், டொலர் பிரதேசங்கள் அல்லாத ஏனைய பிரதேசங்கள் .. | 687·2 | 759·9 | — 72·7 | 662·5 | 851·8 | —189·3 |
| (i) ஐரோப்பாக்கண்ட பொருளாதாரக் கூட்டுறவுத்தாபனம் .. | 188·2 | 232·3 | — 44·1 | 189·2 | 236·2 | — 47·0 |
| (ii) ஏனையவை .. | 499·0 | 527·6 | — 28·6 | 473·3 | 615·6 | —142·3 |
| மொத்தம் | 2,029·3 | 2,173·1 | —143·8 | 1,972·2 | 2,118·6 | —146·4 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

**ஒதுக்குநிதிகள்**

இலங்கை தனது நிதியீட்டக்குறையை, 1962ம் ஆண்டிலிருந்த நிதியீட்டக்குறையாகிய 1886 இலட்ச ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டில், 1947 இலட்ச ரூபாய்களுக்கு அதிகரித்தது. 1962ம் ஆண்டில் வெளிநாட்டுச் சொத்துக்கள் நிதியீட்டக்குறையில் 15 சதவீதமானவற்றிற்கு நிதியீட்டின. ஆனல் 1963ம் ஆண்டில் அவை நிதியீட்டக்குறையில் 20 சத வீதத்திலும் மேலானவற்றிற்கு நிதியீட்டின. ஆகவே 1963ம் ஆண்டில், வெளிநாட்டுச் சொத்துக்கள் 416 இலட்ச ரூபாய்களால் 4623 இலட்ச ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றன. இது, 1961, 1962 ஆகிய இவ்விரு வருடங்களில் ஒவ்வொன்றிலும் சர்வதேச நாணய நிதியிலிருந்து பெறப்பட்ட 538 இலட்ச ரூபாய்கள் கொண்ட தொகையினல் சீராக்கப்படுமுன், 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 278 இலட்ச ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியுடனும், 1961ம் ஆண்டில் ஏற்பட்ட ஆக 96 இலட்ச ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியுடனும் ஒப்பியல்பாகின்றது.

1963ம் ஆண்டு முடிவின்போது வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டவற்றைத் தவிர்த்து) 3588 இலட்ச ரூபாய்களாக விளங்கியது. இத்தொகையிலே, மகா வங்கியின் சர்வதேச ஒதுக்குநிதி 1142 இலட்ச ரூபாய்களுக்கும், வர்த்தக வங்கிகள் 1053 இலட்ச ரூபாய்களுக்கும், அரசாங்கமும், அரசாங்க முகவர் நிலையங்களும் 1393 இலட்ச ரூபாய்களுக்கும் (இவை பிரதானமாக தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி ஆகியவற்றில் உள்ள முதலீடுகளையும், வெளிநாடுகளிலுள்ள அரசாங்க முகவர் நிலையங்களின் ஏனைய நிதிகளையும் குறிப்பன) வகை கூறுகின்றன. 1963ம் ஆண்டு இறுதியிலே, மகாவங்கியினது சர்வதேச ஒதுக்குநிதியின் திரவமானதும், ஓரளவு திரவத் தன்மை வாய்ந்ததுமான நிதிகள் 482 இலட்ச ரூபாய்களாக விளங்கின. இத்தொகையில் இலங்கைக்கு வரவேண்டிய இருபக்கக் கொடுப்பனவு ஒப்பந்த நிலுவைகள் 153 இலட்ச ரூபாய்களாக விளங்கின. மொத்த சர்வதேச ஒதுக்குநிதியில் 660 இலட்ச ரூபாய்கள் கொண்ட தொகை, வெளிநாட்டுப் பிணைகளின் முதலீடுகளைக் கொண்டிருந்தது.

1963ம் ஆண்டின் இறுதியிலுள்ள 3588 இலட்ச ரூபாய்களைக் கொண்ட வெளிநாட்டுச் சொத்துக்கள் (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளுக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட சொத்துக்களைத் தவிர்த்து) 1963ம் ஆண்டிற் செய்யப்பட்ட இறக்குமதிகளின் பெறுமானத்தில் ஆக 19 சதவீதமானவற்றையே பிரதிபலிக்கின்றன. இலங்கை போன்ற ஒரு ''வெட்டையான'' பொருளாதாரத்தையுடைய நாடு, தனது சென்மதி நிலுவைகள், ஏற்றுமதிகளுக்காக இறக்குமதிகளைப் பண்டமாற்ருகப் பெறும் நியதிகள், ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் அளவுகளில் மாற்றங்கள், போன்ற சக்திகளினுற் பெரிதும் ஊறுபடத்தக்கன என்பதைக் காண்கிறது. ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் விலைகள் நிலைபேறற்றனவாக இருந்ததால் ஏற்பட்ட மாற்றங்களுக்கு, இலங்கையின் சென்மதி நிலுவைகள் பெரிதும் பாதிக்கப்படத் தக்கனவாக அமைந்தமையை, இலங்கையின் கடந்த சில வருடங்களினதும், குறிப்பாக 1963ம் ஆண்டினதும் அநுபவம் காட்டுகின்றது. மேலும், இலங்கையின் குறுகியகாலப் பொறுப்புக்கள், குறிப்பாக இருபக்கக் கொடுப்பனவு ஒப்பந்தங்களின் மீதான நிலுவைகள், கணிசமான அளவு அதிகரித்திருப்பதாக அண்மை வருடங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. இக்குறுகிய காலப் பொறுப்புக்களின் வளர்ச்சியும், குறுகிய காலப் பகுதிக்குள் இவற்றின் மட்டங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமும், வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள் ஒரு நியாயமான அளவுள்ள குறைந்த மட்டத்தில் நிலையாக வைத்திருக்கப்படவேண்டியது அவசியம் என்பதை மேலும் வலியுறுத்துகின்றன.